# திருமூலரின் திருமந்திரத்தில் அறிவியல் சிந்தனைகள்

24

**முனைவர் க.திலகவதி,**
இயக்குநர், தமிழ்ப் பண்பாட்டு மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010. மின்அஞ்சல்: thilaga1995@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

திருமூலர் இயற்றிய திருமந்திரம் பல அறிவியல் செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. திருமூலர் மானுடச் சமுதாயம் நலம்பெறுவதற்காகப் பல்வேறு அறிவியல் செய்திகளைப் பாடியுள்ளார். பல்வேறு அறிவியல் கருத்துகளைப் பின்பற்றுவதன் மூலம் தனிமனித நலம், உடல்நலம், மனநலம் சமுதாய நலம் மேம்படும். அவ்வகையில் உடம்பைப் பேணும் முறை, நோய், நோயின்றி வாழும் முறை, உடற்பயிற்சி, யோகப் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய உடலியல், உடலோம்பல், நோயியல், மருந்தியல், கருப்பவியல், அணுவியல் போன்ற பல்வேறு அறிவியல் சிந்தனைகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

**முன்னுரை**

சைவ சமயத்தின் இருகண்களாகப் போற்றப்படுவன பன்னிரு திருமுறைகளும், பன்னிரு சாத்திரங்களும் ஆகும். பன்னிரு திருமுறைகளில் திருமூலர் இயற்றிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாக அமைந்துள்ளது. திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகிற் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து, ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக மூவாயிரம் திருப்பாடல்களைப் பாடினார் என்பர். இந்நிலவுலகில் நெடுங்காலம் தாம் தங்கியிருந்த காரணம் இறைவனுடன் பிரிவின்றி விளங்கும் அருட்சக்தியாகிய அன்னையை வழிபட்டு, அவ்வன்னையின் திருவருளால் இவ்வுலகில் பத்தி நெறியையும், யோக நெறியையும், ஞானநெறியையும் நிலைபெறச் செய்து இறைவனது அருட்கூத்தினை விளக்கும் தமிழ் வேதமாகிய திருமந்திரநூலை அருளிச் செய்தல் பொருட்டே என்பதைத் தம் வாக்காலே (திரு.75) கூறியுள்ளார்.

“ஒப்பில் எழுகோடி யுகமிருந்தேனே …” (திருமந்.74)
“இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி …” (திருமந்.80)

என்று குறிப்பிட்டுள்ளார்.

**உடலியல்**

திருமூலர் நீண்ட காலம் வாழ்ந்தவர். சாகாக்கலையாகிய காயகற்பத்தை மேற்கொண்டவர். உடலை இழிவாக எண்ணாமல் பிறர்க்குத் தொண்டாற்றும் தன்மையராக வாழ்ந்தவர். தான் நீண்ட காலம் வாழ்ந்த திறத்தினை,

“நந்தியருளாலே மூலனை நாடிப்பின்

நந்தியருளாலே சதாசிவ னாயினேன்
நந்தியருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்தியருளாலே நானிருந்தேனே ...” (திருமந்.92)

எனத் திருமூலர் குறிப்பிடுவதால் அறியலாம். இதன்மூலம் இறை உணர்வில் மனம் ஒன்றி வாழ்பவர்களுக்கு எவ்வித நோயும் ஏற்படாது; உடல்நலம், மனநலத்துடன் வாழ்வார்கள் என்பதை உணர்ததுகின்றார். உண்ணும் உணவிற்கேற்ப உடலும் மனமும் அமையும் என்பதை,

“அருந்திய அன்னம் அவை மூன்று கூறாம்
பொருந்தும் உடல்மனம் போம்மல மென்ன
திருந்தும் உடல்மனமாங் கூறு ...” (திருமந்.1933)

எனக் குறிப்பிடுகிறார். மூச்சுப் பயிற்சி செய்து, உடம்பிலுள்ள அமுதமயமான வீரியத்தை (அமுரி நீரை) கீழே செலுத்தாமல் மேலே செலுத்தினால் உயிர் வருந்தாது உடல் பலமடையும். உப்பு நீரையுடைய கடலுக்கருகே தோண்டி எடுக்கின் நன்னீர் இருப்பது போன்று சிறுநீர் வாயிலுக்கருகே அமுரி இருக்கும் என்பர். அமுரிதாரணை என்னும் மூன்றாம் தந்திரத்தில் பல செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். அமுரி-வீரியம்; தாரணை-தரித்தல். வீரியத்தை உடம்பில் தரிக்கும்படி செய்தல். அமுரிநீரை உடம்பில் தரித்துவந்தால் ஓராண்டில் ஒளியைக் காணலாம். காற்றுடன் கலந்து மேலேறும். எட்டு ஆண்டுகளில் மனம் கீழ்நோக்குதலைத் தவிர்த்து மேலே நிற்கும். மகிழ்ச்சியை விளைவித்துக் கொண்டிருக்கும். உடம்பு பொன் போன்று ஒளிவிடும், உரோமம் கருமை பெறும். இந்நீர் சிரசை அடையும்போது, வெண்மிளகு, நெல்லி வற்றல், கத்தூரி மஞ்சள், வேப்பம் வித்து இவற்றை அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்து வருவாராயின் உடம்பு மென்மையாவதோடு, உயிர் இறுகும். இம்மருந்து வீரமருந்து என்றும், தேவர்கள் மருந்து என்றும் கூறப்படும்.

“தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரும் ஓராண்டில் ஊனமொன் றில்லை
வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களிதரும் காயங் கனகம தாமே” (திருமந்.846)

“மாறும் இதற்கு மருந்தில்லை ...” (திருமந்.847)

“நரைதிரை நீக்கி நுகரவல்லார்க்கு
நரைதிரை மாறும் நமனும் அங்கில்லையே” (திருமந்.848)

“களவு காயம் கலந்த இந்நீரில்
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இறுகும் கபாலமே” (திருமந்.849)

“வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவார் அகலிடம்
சோதி மருந்திது சொல்லவொண்ணாதே” (திருமந்.850)

எனக் குறிப்பிடுவதால் நரை, திரை நீக்கி வாழும் அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளமை புலனாகும். மேலும் மூலாதாரத்திலுள்ள அக்கினி கலையைத் தலையிலுள்ள விந்து நாதங்களோடு சேர்க்கத் தெரிந்தவர்கட்குப் புறச்சடங்கு தேவையில்லை எனவும் கூறுவர். அதாவது குறிப்பிரதேசத்தில் காமக்கழிவினைச் செய்வதை மாற்றி நகாரத்தை (குறி, கொப்பூழ், இருதயம், கண்டம், நெற்றி என்பன) புருவ நடுவில் விளங்கும்படி செய்தல் எனப் பொருள்படும்.

திருமூலர் மூன்றாம் தந்திரத்தில் 'சரீர சித்தி உபாயம்' (சாகாக்கலை) என்னும் தலைப்பில் உடம்பை அழியாமல் பாதுகாப்பதற்குரிய வழிமுறைகளை 16 பாடல்களில் கூறியுள்ளார்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே ..." (திருமந்.724)

உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டு, உத்தமன் கோயில் கொண்டான் என்று கருதி உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே எனக் கூறுவது உடம்பைச் சிறப்பாகப் பேணினால்தான் மனநிறைவாகவும், நீண்ட நாளும் வாழ முடியும் என்ற அறிவியல் கருத்தைப் புலப்படுத்தியுள்ளார். உடம்பில் நூறு நாடிகளும், 96 தத்துவங்களும், 96இல் 60 தாத்துவிகங்களும், 36 தத்துவங்களும், ஆறு அத்துவாக்களும் குற்றங்களின்றி இயங்கச் சாதகர் மேல்நிலைக்குச் செல்வர் (729) எனக் குறிப்பிடுவர். உடம்பு அழியும்போது 96 தத்துவங்களும் நீங்கும்.

"முப்பதும் முப்பதும் முப்ப தறுவருங்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே ..." (திருமந்.154)

எனக் கூறுவது அறியத்தக்கது.

**உடலோம்பல்**

**கள்ளுண்ணாமை**

கள்ளுண்டு களிக்கும் இழிசெயலைச் சான்றோர் விரும்புவதில்லை. கள்ளுண்ணலை நஞ்சுண்ணலோடு வள்ளுவர் ஒப்பிட்டுக் கூறுவார். இன்றைய காலச் சூழலில் மனிதனின் நாகரிக வாழ்க்கையில் கள்ளுண்ணல் – மது அருந்துதல் இரண்டறக் கலந்ததாக அமைந்திருக்கிறது. சமுதாயச் சீரழிவுக்குக் காரணமாக அமைகின்ற ஏதுக்களில் மதுவும் ஒன்று. கள்ளுண்ணாமையை வலியுறுத்தியும், கள் உண்ணலால் ஏற்படும் தீங்கு பற்றியும் திருமூலர் முதல் தந்திரத்தில் பலவாறு விதந்துரைக்கின்றார்.

"முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்" (திருமந்.1:3)
"காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகும்" (திருமந்.3:1)
"கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே" (திருமந். 5:4)

“மயக்கு மதுவுண்ணு மாமூடம் தேரார்” (திருமந். 6:2)
“மயக்குந் தியங்கும் கள்வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் கயங்கொண்ட ஞானத்து முந்தார்” (திருமந்.7:1-3)

எனக் கூறுவதன் மூலம் கள்ளுண்ணாமைப் பற்றிய கருத்துக்களை அறியலாம். கள்ளுண்ணலே மற்ற இழிசெயல்களுக்குக் காரணமாக அமைகின்றது. கள்ளுண்ணலை ஒழித்தால் நன்னிலையினை மாந்தர் அடைவர் என்பதே திருமூலர் காட்டும் ஒழுக்கநெறி ஆகும்.

**பிறன்மனை நயவாமை**

தன் மனைவி இருக்க, பிறருடைய மனைவியின் மேல் காமுறுதல் தீராத இடும்பைத் தரும். பிறன்மனையை விரும்புபவருக்குத் தொழுநோய் உண்டாகுமென விவேகசிந்தாமணி (பா.114) உரைக்கின்றது. பிறன்மனை விரும்பினால் சுற்றத்துடன் சேர்ந்து அழிவே நேரும் என்பதை இராமாயணம் விளம்புகின்றது. தமிழ்ச் சித்தரான திருமூலரும் பிறன்மனை விரும்புதலைக் கடுமையாகச் சாடுகிறார். தன் மனைவி தன் வீட்டில் இருக்க பிறர் மனைவியை விரும்புதலானது, தன் வீட்டில் உள்ள நன்கு பழுத்த, இனிய சுவையையுடைய பலாக்கனியை உண்ணாமல், காட்டகத்தே உள்ள ஈச்சங்கனி உண்ணத் துயருறுவதற்கு ஒப்பானது என்கிறார். இக்கருத்தினை,

“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே” (முதல் தந்திரம்: பிறன்மனை நயவாமை : 1)

என்ற பாடல் இயம்புகின்றது. பிறன்மனை விரும்புஞ் செயலானது பற்றித் திருமூலர் மேலும் கூறுகையில்,

“திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே” (முதல் தந்திரம்: பிறன்மனை நயவாமை : 2)

என்று மொழிகின்றார். செம்மையாக வளர்த்த மாமரத்தினின்று பெற்ற தீஞ்சுவைக் கனியைச் சேமிப்புப் பொருளாக எண்ணி அறையில் பூட்டி வைத்து விட்டு புளியம்பழத்திற்காகப் புளிய மரக்கிளையில் ஏறி வருந்துவார். தீஞ்சுவைக் கனி போன்ற மனைவியை விடுத்து அருமையற்ற பிறன் மனைவிக்காகத் துன்புறுவது மனைவியை அழிப்பதோடு தானும் அழிதலான செயலையே ஒக்கும். எனவே, பிறன் மனை நயத்தல் கூடாது என்பது திருமூலர் காட்டும் விழுமிய ஒழுக்க நெறியாகும். இந்நெறி எக்காலத்திற்கும் ஏற்றதாகும்.

**கூடா ஒழுக்கம்**

தற்காலத்தில் கூடாஒழுக்கம் மிக அதிகமாகிவிட்டது. பசுத்தோல் போர்த்திய புலிகளாகப் பலர் வாழ்கின்றனர். கூடாஒழுக்கம் பற்றித் திருமூலர்,

“நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியின் வழுவின் நெருஞ்சில் முள் பாயும்
நெறியின் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியின் நெருஞ்சிமுள் பாய கில்லாவே” (திருமந்.160)

எனக் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

**நோயியல்**

திருமூலர் திருமந்திரத்தில் பலவகையான நோய்களையும் நோய் வருதற்குரிய காரணத்தையும், இறப்பு நிகழும் முறையையும் அறிவியல் பூர்வமாக உணர்த்தியுள்ளார். எதிர்பாராமல் வருகின்ற இதய அடைப்பு (மாரடைப்பு) நோயைப் பற்றி,

“அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே…” (திருமந்.148)

எனக் கூறியுள்ளார். மருத்துவத்துறை மாரடைப்பின் மிக முக்கியமான அறிகுறி இடதுமார்பில் வலி தோன்றுவதாகும் எனக் கண்டறிந்த செய்தியை திருமூலர் அன்றே பாடியுள்ளமை ஒப்புநோக்கத்தக்கது. இருமல், இரத்தசோகை, கோழை, சுரம் ஆகிய நோய்கள் அறம் செய்யாதவர்களுக்கு வரும் என்பதை,

“இருமலும் சோகையும் ஈளையம் வெப்பும்
தருமம் செய்யாதவர் தம்பால தாகும் …”
“உருமிடி நாகம் உரோணி கழலை
தருமஞ் செய்வார் பக்கல் சாரகிலாவே” (திருமந்.263)

என நோய்க்குரிய காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

**உயிர் பிரிதல்**

உடம்பிலுள்ள உயிர் பிரிந்தால் அவ்வுயிர் மீண்டும் உடம்பில் புகமுடியாது. இதனை,

“மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே …” (திருமந்.146)

எனக் குறிப்பிடுவர். மூக்கினில் கைவைத்துப் பார்த்தும், நாடியைப் பார்த்தும் உயிர் இயக்கம் நின்று விட்டதை மருத்துவர்கள் சோதித்து அறிவர். இதனைத் திருமூலர்,

“மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய் …” (திருமந்.147)
“கைவிட்டு நாடிக் கருத்தழிந்து அச்சற …” (திருமந்.151)

எனப் பாடியுள்ளதால் அவருடைய அறிவியல் உணர்வை அறியலாம்.

உடம்பில் உயிர் பிரிந்தபின் ஒன்பது வாசல்கள் ஒருசேர அடைபடும். ஐம்பொறிகள் செயல் இழக்கும். நாடிகளின் இயக்கம் நின்று விடும். உடல் செயலற்றுக் கிடக்கும். இதனை,

"நெய்யட்டுச் சோறுண்ணும் ஐவரும் போயினார் …" (திருமந்.151)

"பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன …" (திருமந்.152)

"கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
ஆடும் இலயமும் அற்றது …" (திருமந்.162)

எனப் பாடியுள்ளமையால் உணரலாம். இவ்வுடம்பில் ஐந்து இந்திரியங்களும், ஆறு ஆதாரங்களும், முப்பது எலும்பு இணைப்புகளும், அவற்றைச் சார்ந்துள்ள பதினெட்டு பொருத்துகளும், இவற்றின் மீது போர்த்தப் பெற்ற ஒன்பது பந்தலும், பதினைந்து எலும்புகளும் ஆகிய இவையெல்லாம் சேர்ந்து அமைக்கப் பெற்ற உடம்பு (திருமந்.159) உயிர் நீங்கிய பின் பயனற்றுப் போயிற்று என்பர். இவற்றால் உடற்கூறு பற்றிய அறிவியல் செய்தியை உணர்த்தியுள்ளார்.

**மருந்தியல்**

உடம்பு நோயின்றி இருந்தாலே கடமைகள் யாவும் சிறப்படையும். உடம்பில் நோய் மனத்தாலும் உடம்பின் புறக்கூறுகளாலும் உருவாகிறது. எனவே இவ்விரண்டையும் செம்மையாக்குதலால், உடம்பினை நலமானதாக்கவியலும்.

உடம்பின் உறுப்புக்களும் மனமும் ஒருங்கிணைந்த நிலையில் நோய்கள் வலுவிழக்கின்றன. மனவொருமைப்பாடு இன்மையே பல நோய்களுக்குக் காரணமாகிறது. எனவே மனத்தை ஒருமைப்படுத்துதற்காகத் திருமூலர் தியானம் மற்றும் யோக வழிகளை விவரிக்கிறார்.

"நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்
டுயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே" (திருமந்.605)

ஐந்து பொறிகளையும் தறிகெட்டு அலையாமல் ஒருநிலைப்படுத்தி அடக்கி ஆள்கிறவனே தெய்வநிலை எய்தியவனாகிறான்.

"கிடக்கும் உடலில் கிளரிந் திரியம்
அடிடக்க லறுமவன் தானே அமரன்" (திருமந்.2032)

யோகப் பயிற்சியை முறையாகச் செய்வார் உடம்புக்கு நோய் எதுவும் வருதல் இல்லை.

"நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைதது நினையவும் வல்லையேல்
மாசித்த மாயோகம் வந்து தலைப்பெய்தும்
தேகத்துக் கென்றும் சிதைவில்லை யாமே" (திருமந்.581)

மனத்தைச் செவ்வையாகச் செய்வதற்கு வழி கூறுகிற திருமூலர், உடம்பு நோயின்றி அமைதற்கும் நோய் தீருதற்குமான மருந்துகளையும் கூறுகிறார். முறைப்படி செய்யப்பட்ட அமுரியைத்

தொடர்ந்து எட்டு ஆண்டுகள் உண்ண மனிதனின் மனமும் காற்று மண்டலமும் நன்முறையில் இயங்கும் என்பதனை ‘அமுரிதாரணை’யில் திருமூலர் குறிப்பிட்டுள்ளார். மேலும்,

“மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும்மேனி இருளும் கபாலமே” (திருமந்.849)

என்கிறது திருமந்திரம்.

**கருப்பவியல்**

‘கர்ப்பக்கிரியை’ (41 பாடல்கள்) என்னும் தலைப்பில் கரு உருவாகும் முறை, கரு வளர்ச்சி, ஆண், பெண் வேறுபாடு போன்ற பல அறிவியல் செய்திகளை மிகமிக நுட்பமாகக் கூறியுள்ளார். அவரது அறிவியல் சிந்தனைகள் வியக்க வைக்கின்றன. நாற்பத்தொரு பாடல்களை இதன்கண் பாடியுள்ளார். வயிற்றில் உருவாகும் குழந்தை தாய் தந்தையின் தன்மையைக் கொண்டிருக்கும். கூட்டுறவில் ஆண் பண்பு மிகுந்தால் குழந்தை ஆணாகும்; பெண் பண்பு மிகுந்தால் குழந்தை பெண்ணாகும்; ஆண், பெண் குணம் சமமாகின் குழந்தை அலியாகும். பெண்ணின் நீக்க நிலைக்குக் கடந்த பூமானாகில் உலகை ஆளும் குழவியாகும். சுரோணிதமாகிய அத்திப்பழத்தைச் சுக்கிலமாகிய அறைக்கீரை வித்து உண்டு (திருமந்.160) குழந்தை உருவாகும். அக்குழந்தை பத்து மாதங்களில் (முந்நூறு நாள் கழித்து) வெளிவரும். கருவானது ஆண் உடம்பில் இரண்டு திங்கள் தங்கிப் பின் பெண் உடலில் புகும். ஆணின் சுக்கில நாடியில் தோன்றும் வெள்ளை நிறமான சுக்கிலமும் பெண்ணின் யோனியில் தோன்றும் செந்நிறமான சுரோணிதமும் கலந்து சிசுக்கு எண்சாண் உடம்பு உருவாகும். சுக்கிலம் எட்டு விரற்கடையளவும், சுரோணிதம் நான்கு விரற்கடையளவும் வெளிப்படும். எனவே ஒரு குழந்தை உருவாக ஆண் உடலில் இரு மாதங்கள் இருந்து, பின் பெண் உடலில் பத்து மாதம் இருந்து வெளிவரும் என்னும் அரிய அறிவியல் உண்மையைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இதனை,

“உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்தில்” (திருமந்.485)
“முட்டை பிறந்தது முந்நூறு நாளினில் …” (திருமந்.163)
“பொறைநின்ற இன்னுயிர் போந்துறநாடிப்
பறிகின்ற பத்தெனும் பாரம்செய் தானே” (திருமந்.452)
“கருவை ஒழிந்தவர் கண்டநால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்துமற் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்த
உருவம் இரண்டாக ஓடி விழுந்ததே” (திருமந்.454)
“விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி …” (திருமந்.455)
“ஒழிந்த முதல் ஐந்தும் ஈரைந்தோடுஏறி
பொழிந்த புனல்பூதம் போற்றும் கரணம்
ஒழிந்த நூல் உச்சி உள்ளே ஒழித்ததே”
“ஏயங் கலந்த இருவர்தஞ் சாயத்துப்
பாயும் கருவும் உருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்

மாயங் கலந்த மனோலய மானதே …" (திருமந்.459)

"பூண்பது மாதாபிதாவழி போலவே …" (திருமந்.477)

"சுக்கில நாடியில் தோன்றிய வெற்றியும்
அக்கிர மத்தே தோன்றுமவ் வியோளியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே …" (திருமந்.464)

என வரும் திருமந்திரப் பாடல்களின் (கருப்பவியல்) குழந்தை உருவாகும் செய்தியை அறியமுடிகின்றது. குழந்தையின் ஆயுளையும் கணக்கிட்டுக் கூறியுள்ளமை வியத்தற்குரியது. சுக்கிலம் ஆணிடமிருந்து பிரிந்து ஐந்து விரற்கடை ஓடி விழுந்தால் குழந்தைக்கு ஆயுள் நூறாண்டாகும்; நான்கு விரற்கடை ஓடி விழுந்தால் ஆயுள் எண்பதாகும். சுக்கிலத்தைச் செலுத்துகின்ற வாயு குறையுமானால் குழந்தை குட்டையாக இருக்கும்; பாய்கின்ற வாயு இளைக்கின் குழந்தை முடமாகும்; பாய்கின்ற வாயு மெலிந்திடின் குழந்தை முடமாகும்; பாய்கின்ற வாயு தடைப்படின் குழந்தை கூனாகும்; இவையெல்லாம் ஆணுக்கே உரியது. பெண்களுக்குச் செலுத்துகின்ற வாயு இல்லை. எனவே ஆணின் விந்து செலுத்தும் வாயுக்கேற்பவே குழந்தையின் அங்கம் (உடல்) அமையும். தாயின் வயிற்றில் வளரும் குழந்தைக்குத் தாயின் வயிற்றில் மலம் மிகுமாயின் அக்குழந்தைக்கு மந்தபுத்தி உண்டாகும். தாயின் வயிற்றில் நீர் மிகுந்தால் அக்குழந்தை ஊனமாகும். மலம், நீர் இரண்டும் மிகுமாயின் அக்குழந்தை குருடாகும். எனவே தாயின் வயிறு மலம் நீர் மிகாதிருத்தல் குழந்தைக்கு நலம் பயக்கும் என்ற அறிவியல் உண்மையைத் திருமூலர் மிகச் சிறப்பாகக் (திருமந்.479, 480, 481) கூறியுள்ளார். அறிவியல் உலகம் ஆராயத்தக்க செய்தியாகும்.

**ஆண்-பெண் வேறுபாடு**

போக காலத்தில் ஆணின் மூச்சுக்காற்று வலநாசியில் (சூரிய கலை) இயங்குமாயின் ஆண் குழந்தையும், மூச்சுக்காற்று இடநாசியில் (சந்திர கலை) இயங்குமாயின் பெண் குழந்தையும், சுக்கிலத்தைச் செலுத்தும் பிராண வாயுவோடு அபானன் என்னும் மலக்காற்று எதிர்த்தால் சுக்கிலம் சிதைந்து இரட்டைக் குழந்தையும், சூரியகலை, சந்திரகலை ஒத்து இயங்கினால் அலியாகிய குழந்தையும் பிறக்கும். பிராணவாயு இருவருக்கும் ஒத்து இயங்குமாயின் குழந்தை அழகாக இருக்கும். பிராணவாயு இருவருக்கும் தடுமாறினால் கரு உண்டாதற்கான வாய்ப்பு இல்லையாகும். பிராணனின் இயக்கமும் சுக்கிலப் பாய்ச்சலும் முறையாக அமையுமாயின் குழந்தை பகலவன் பொன்னுருவைப் போன்று (சொர்ண விக்கிரகம்) இருக்கும். இக்கருத்தினை, திருமந்திரத்தின் (482, 483, 484, 488, 491) பாடல்கள் உணர்த்துகின்றன.

**அணுவியல்**

உலகில் வாழும் உயிர்களின் வடிவத்தைச் சொல்ல வந்த திருமூலர், ஒரு மாட்டின் முடியை எடுத்து ஆயிரம் கூறாக்கி, ஆயிரம் கூறு போட்டதில் ஒரு முடியை எடுத்து அதை நூறாயிரம் கூறு

போட்டால் அதுதான் (ஆன்மா) உயிரின் வடிவம் என்று அணுவியல் சிந்தனையை (NANO) காட்டுகிறார்.

"மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று – நூறுடன் கூறிட்டு
மேவியது கூறது ஆயிரமானால்
ஆவியின் கூறு நூறாயிரத் தொன்றாமே" (திருமந். சீவன், 2077)

பசுமாட்டு மயிரின் உரு அளவு – 100 மைக்ரோன், 1 முடி – 100 ஆகப் பிரிப்பதாகக் கொண்டால், 0.1 / 100 = 0.001 மில்லி மீட்டர். அதை ஆயிரமாகப் பிரித்தால் 0.001 / 1000 = 0.000001 மில்லி மீட்டர். இதை நூறாயிரமாகப் பிரித்தால் 0.000001 / 100,000 = 0.00000000001 மில்லி மீட்டர். இதையே உயிரின் உருவத்தின் அளவாக இருக்கின்றது என்கிறார் திருமூலர். அணுவின் சுற்றளவு 0.000000212 மில்லி மீட்டர். ஆனால் திருமூலர் அதற்கும் கீழே சென்று உயிரின் அளவை மிகச் சிறிய அணுவாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் கடவுளின் வடிவத்தையும் அணுவிற்குள் அணுவாய் இருப்பதை,

"அணுவில் அணுவினை ஆதிப் – பிரானை
அணுவில் அணுவினை ஆயிரம் கூறிட்டு
அணுவில் அணுவை அணுகவல் லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும் ஆமே ..." (திருமந்.2008)

என்று அணுவியல் சிந்தனையைப் (Nanotechnology) பாடியுள்ளார்.

**தொகுப்புரை**

- திருமூலரின் அறிவியல் சிந்தனைகள் எக்காலத்திற்கும் பொருந்திவரும் அறிவியல் கூறுகளைக் கொண்டுள்ளன என்பதை அறியமுடிகின்றது.
- உடலியல், யோகவியல், நோயியல், மருந்தியல், கருப்பவியல், அணுவியல் போன்ற அறிவியல் சிந்தனைகள் மானுட வாழ்க்கைக்குப் பயன்தரும் வகையில் கூறப்பட்டுள்ளன என்பது நோக்கத்தக்கது.
- மனநலம், உடல்நலம், ஆன்மநலம் காக்கும் வழிமுறையைப் பின்பற்றி மருந்தின்றி நூறாண்டுகள் வாழத் திருமூலர் வழிகாட்டியுள்ளார்.

**துணைசெய்த நூல்கள்**

1. திருமூலர், திருமந்திரம், தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1974.
2. வரதராஜன், ஜி., திருமூலரின் திருமந்திரம், தொகுதி 1, 2, 3, கழக வெளியீடு, சென்னை.
3. வெள்ளைவாரணன், க., பன்னிரு திருமுறை வரலாறு 1, 2, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.